உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முத்திராலக்ஷணமும்

# பிராசாதமாலையும்

தரு. ஞான. நாகலிங்கத்தம்பிரான்.

## விபூதிப்பை விதி.

எட்டங் குலமகன் றீரா றுயரு மெழிலுடைய
வட்டநற் பைவைத்துப் பூதி யணிந்திடில் வாய்க்குமுத்தி
எட்டுணை யேனு மிதிற்குறைப் பைவைத்துப் பூதியிட்டாற்
கட்ட நரகமென் றாகமம் யாவுங் கழறிடுமே.

## விபூதிக் குடுக்கை.

வில்வநற் குடுக்கை தன்னின் மேவிடும் பூதி சாத்தில்
ஒல்லையின் மாபா வங்க ளோலமிட் டோடி நிற்குஞ்
சொல்லிய சுரைக்கு டுக்கை விபூதியைத் துதித்துச் சாத்திற்
பல்கிடுங் கோடி ஜென்மந் தனிற்புரி பாவம் போமே.

வத்திரத்தாற் புலித்தோலான் மான்றோலாற் பைகள்
வகுத்தள்ளி நீறணிந்தான் மன்னியவா ணவமுங்
குத்திரநோ யெவையாவுங் குடிப்போகு முன்சொற்
குடுக்கை யல்லால் விபூதிதலை கீழாகத் தட்டிற்
சித்திரமா கியநுதலிற் றரித்தோரு மேற்ற
திண்ணியருஞ் சிவனாணை சிவனாணை திரண்ட
பத்தியா ரவுரமதில் வீழ்வரென வீரம்
பகர்வதுகா மியமந்தப் படிபகருந் தானே.

## சேபமாலை.

அங்குலி யொன்றினுக் கொன்றென லாகும்
அக்கொடு பத்திரி பத்தென லாகுஞ்
சங்கு சதம்பவ ளங்களொ ராயிரம்
தண்படி கம்பதி னாயிர மாகும்
பொங்கு திறற்கடல் முத்தொரு லக்ஷம்
போதவள் தாமரை பொன்றொரு கோடி
எங்குமி ளங்குசந் தாஞ்சத கோடி
எறுடை யான்மணிக் கெண்ணவொண் ணாதே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முத்திராலக்ஷணமும்

# பிராசாதமாலையும்

இவை

திருக்கைலாய பரம்பரை - தொண்டைமண்டலம்

ஸ்ரீ காஞ்சீபுரம் ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள் ஆதீனம்

மெய்கண்ட சிவாசாரியர் சந்தானம் ஞானபீடத்தில்

227 - வது பட்டம்

குருமூர்த்தியாக வெழுந்தருளியிருக்கும்

ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக சுவாமிகள்

அவர்கள் கட்டளையிட்டருளியபடி

ஷை பரம்பரைத் தருமபுரவாதீனத்தின்

அடியார் குழாத்துளொருவரும்

திருப்பனந்தாள் காசிமடாலயம் ஆதீனகர்த்தரான

**ஸ்ரீலஸ்ரீ காசிவாசி**

**சோக்கலிங்க சுவாமிகளின் மாணுக்கருமாகிய**

**தரு - ஞான நாகலிங்கத்தம்பிரான் சுவாமிகளால்**

பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து,

**சென்னை, சாது அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டன.

ரிஜிஸ்டர் காபிரைட்]

[விலை அணு 2.

1925.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# முத்திராலக்ஷணம்

## அனுஷ்டான முத்திரை.

மன்னுநடு விரன்மூன்று மடக்கிவிநா யகனை
        வணங்கியுயர் சிரம்புடைத்தல் சிகாவெனுமுத் திரையாம்
உன்னுமிரு கரங்குவித்த னமக்கார மாகும்
        உயர்ந்தநடு தர்ச்சனியுள் ளடக்கல்கோ கோட்டம்
என்னுநிரீக் கணமுத்ரை புரோக்கணமா மதனுக்
        கியன்றதீக் கணமுத்ரை தர்ச்சனியை நிமிர்த்தல்
அன்னதா டனஞ்செய்த லங்குலிக ணீட்டி
        யங்குட்ட மடக்கலப் யுக்கணஞ்சோ திகமே. (க)

அங்கைவிரற் றர்ச்சனியு மத்திமையு நிமிர்த்தல்
        அணிகோ விடாமா மதுதாளத் திரயங்
தங்குதிக்கு பந்தனமாந் தர்ச்சனியங் குட்டந்
        தனைத்தெரித்தல் சோடிகா முத்திரைதா னென்பர்
பொங்குபுனற் றர்ச்சனியால் வளைத்தலவ குண்டம்
        பொருந்துமது தீக்கணமுத் திரையாகப் புகல்வர்
இங்கிதஞ்சேர் தேனுமா முத்திரையுஞ் செய்தே
        யெழிறருமத் திரசந்திக் கியைந்தமுறை யுரைப்பாம். ()

நலம்பெறும நாமிகைசேர் மத்திமைதர்ச் சனியும்
நடுவளைத்தல் கோமுகமாம் புரோக்கணமு மதனுற்
சலங்கொடுதர்ப் பணஞ்செய்தல் சங்கெனுமுத் திரைநீள்
தர்ச்சனிமூ லத்தடியை யங்குட்டஞ் சார்தல்
துலங்கவிசை யாசமனங் கோகன்ன மாகுஞ்
சுத்தியத ரந்துடைத்தல் பதாகையெனச் சொல்வர்
இலங்குமிடந் தொடுதற்குச் சேட்டையநா மிகையை
யிணைத்திடுதெ றிவ்வியமுத் திரையென்பர் தாமே. (௩)

மத்திமையுந் தர்ச்சனியு மநாமிகையுங் கூட்டி
வளருமிரு கரந்துடைத்தல் சரணமுத்ரை யாகுஞ்
சுத்திசெயு மிருகரமுங் கூட்டியங் குட்டந்
துகளறவுள் வளைப்பதுவே ப்ரசன்னமெனப் புகல்வர்
பத்தியுற வாசனமு மூர்த்தியையு மங்கை
பருவிரல்கள் பதித்திடுதெ லதிட்டான மாகும்
உத்தமமாஞ் சேட்டையடி தர்ச்சனியி னுனியால்
உற்றவதுட் டிணிகமென வுரைத்திடுமுத் திரையே. (ச)

சிறந்தபெரு விரனுனிதான் றர்ச்சனியி னுனியைச்
சேருதல்சின் மயமுத்ரை யெனத்தெரிந்து சொல்வர்
பிறங்குபெரு விரல்நீண்ட மத்திமையைச் சேர்தல்
பெயர்யோக முத்திரையாம் பெருவிரனீள் கனிட்டை
யுறைந்திடுதெ லாக்கிரம முபயகர விரன்மூன்
றுண்மடக்கிச் சேட்டைசிறு விரலணைத்து நீட்டில்
நிறைந்தகிடா முத்திரையா மூவிரலுஞ் சுத்தின்
னிறையான்ம லீகமென நிகழ்த்திடுமுத் திரையே. (௫)

சேட்டைசிறு விரல்வளைக்க மூவிரலு நீட்டித்
திருநயனந் தொடலாக்ர கண்டமெனத் திகழும்
நீட்டுமங்குலி கண்மடக்கித் தர்ச்சனிக ணிமிர்த்து
நிறைகவச முபயமுற நேர்தல்நா ராசம்
வாட்டமில நாமிகைகண் ணுனியங்கை தொடுதல்
வழுவிலுழீஇ முத்திரையாம் பிராண யாமங்
கோட்டமில்தர்ச் சனியடுத்த விரல்மடக்கிச் சேட்டை
கூறுமநா மிகைகூம்பல் வராகமுத்ரை யாமே. (சு)

அங்கைமடித் திடுமுஷ்டி யங்குஷ்ட மிசையே
யானதர்ச்ச னிவளைத்த லங்குசமுத் திரையாந்
தங்குமுஷ்டி வலக்கரத்தை யிடக்கரத்தாற் பிடித்தல்
தகுகும்ப முத்திரையாஞ் சங்காரந் தானும்
இங்கிதமாய் வலக்கரத்தை முஷ்டியாய்ப் பிடித்தல்
இருகரமு மிணைந்துநெடு விரல்களிடை வெளியே
பொங்குபுனல் விடுதல்திரு முத்திரையாங் கனிஷ்டை
பொருந்துமடி விடுதல்சடா முத்திரையாய்ப் புகல்வாம்.

அள்ளுநீ ரிரண்டுமணிக் கரத்தினெதிர் விடுதல்
அர்ப்பண முத்திரையா மதுபூதர்க் காகுங்
கொள்ளுமுறை பிதிராதி தர்ப்பணமங் குஷ்டங்
குலவுநுனி யாற்கொடுத்த லகண்டிதமுத் திரையாந்
தெள்ளுபுன லங்குட்டந் தர்ச்சனிமூ லத்தாற்
செய்கருர வணுக்கதுதான் சிகண்டினமுத் திரையே
விள்ளுமக மருடணத்தி னுமம்வலக் கனிட்டை
விரனுனியில் விட்டிடுத றாயமுத்ரை யாமே. (அ)

கூறுமநா மிகைசேட்டை மத்திமையுங் கூட்டிக்
கொண்டுதிரு நீறெடுத்தன் மிருகமுத்ரை யாகும்
நீறுகுழைத் திடுவதற்குப் புனல்விடுதல் கனிட்டை
நீக்கிநின்ற விரல்கூட்டின் நிரோதான மாகுந்
தேறுவகை முப்பாஞென் பதுமுத்திரை யின்னுஞ்
செய்யவரு மனுட்டானத் திறத்துடையோர்க் கெல்லாம்
பேறினிய கிரியைபுரிந் தந்நிலையி னிற்போர்
பெரும்பயனைப் பெறுவரெனப் பேசிடுமா கமமே. (கூ)

திருச்சிற்றம்பலம்.

அனுஷ்டான முத்திரை முற்றிற்று.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிவபூஜா முத்திரை

## கும்ப முத்திரை.

மண்டுநீர் பிடித்த வலக்கை யிடக்கரங்
கொண்டுமேல் வளைப்பது கும்பமுத் திரையே. (க)

## தேனு முத்திரை.

இருகை கூட்டி யிடையிடை கோத்த
விரல்களிற் றர்ச்சனி விரல்கனிட் டைகளை
யார்த்திடு மத்திமை யனுமிகை களினுற்
சேர்த்துறப் பிடிப்பது தேனுமுத் திரையே. (உ)

## மகா முத்திரை.

நெடியகை யிணைகளை நிமிர்த்தெதிர் முகமுற
அடிமுதன் முடியள வமைக்கின்மா முத்திரை. (ங)

## அங்குச முத்திரை.

பிடித்த தர்ச்சனி பெருவிர லின்மிசை
யடுத்துற வளைத்திட லங்குச முத்திரை. (ச)

## விற்புர முத்திரை.

கருதிணைப் பெருவிரல் கனிட்டை முதனுல்
விரனுனி தொடுவது விற்புர முத்திரை. (ரு)

## கோவிடாண முத்திரை.

பிடித்தகை தர்ச்சனி பிறங்கிய மத்திமை
விடுத்திடு வதுகோ விடாணமுத் திரையே. (சு)

## ஆவாகன முத்திரை.

அஞ்சலி தன்னு ளணிவிர லிரண்டினும்
விஞ்சிய வங்குட்ட மெய்திலா வாகனம். (எ)

## தாபன முத்திரை.

மேவு மஞ்சலி விரித்ததோர் முகமுறத்
தாபனஞ் செய்வது தாபன முத்திரை. (அ)

## சன்னிதான முத்திரை.

பெருவிர லுயர்ந்திடப் பிடித்தகை முட்டிகள்
சருவுற வளைந்திடிற் சன்னிதா னமதாம். (சா)

## சன்னிரோதன முத்திரை.

அன்னசன் னிதானத் தகமுறப் பெருவிரல்
தன்னையுண் மடிப்பது சன்னிரோ தனமே. (கo)

## பதும முத்திரை.

பிணித்தகை விரித்துப் பெருவிர லிணைநடு
பணித்திடப் பிடிப்பது பதுமமுத் திரையே. (கக)

## விம்ப முத்திரை.

பற்பமுத் திரைதரு பாணியி னடுவிரல்
விற்புறத் தொடுப்பது விம்பமுத் திரையே. (கஉ)

## நமக்கார முத்திரை.

பெருவிர லிரண்டும் பிணித்திட நிமிர்த்த
கரமிரண் டுறினமக் காரமுத் திரையே. (கங)

## சோடிகா முத்திரை.

பிடித்தகை தர்ச்சனி பெருவிர னடுவிரல்
துடித்திடத் தெறிப்பது சோடிகா முத்திரை. (கச)

## பதாகை முத்திரை.

ஓரிடத் திருகா முறநிமிர்த் தங்குலி
பாரித் திணைவது பதாகைமுத் திரையே. (கரு)

## சங்க முத்திரை.

தூய பதாகை சொற்பெரு விரனுதி
ஆய தர்ச் சனிவலத் தடிதொடிற் சங்கம். (கசு)

## மற்றுஞ் சங்க முத்திரை.

அங்குலி நான்கு மங்குட் டத்தடி
தங்குற வளைப்பது சங்கமுத் திரையே (கஎ)

## காளகண்ணி முத்திரை.

உறுமிரு கைவிர லுள்ளுறக் குவித்துச்
சிறுவிரல் முதலாய்ச் செறிந்தநால் விரலினுந்
துன்னிரு பெருவிரல் தொட்டுற நிமிர்த்திடிற்
கன்னிகா காள கண்ணிமுத் திரையே. (கஅ)

## இலிங்க முத்திரை.

அடித்திடு மிடக்கையி லங்குட் டந்தனைப்
பிடித்திடும் வலக்கை பெருவிர னுனிநிமிர்த்
தசைவற விடக்கையி லங்குலி வளைஇத்
திசைவுறப் பிடிப்ப திலிங்கமுத் திரையே. (ககூ)

## மனோரத முத்திரை.

இருகையங் குலிகளை யெதிர்முகத் துள்ளுறச்
செருகிய பின்னிணைச் செங்கைகள் கூட்டி

நீட்டுதர்ச் சனிக ணிமிர்த்துறப் பெருவிரன்
மூட்டிடின் மனோரத முத்திரை யாகும் (உ0)

## பஞ்சமுக முத்திரை.

தன்னிலுட் கோர்த்தகை தர்ச்சனி பெருவிரன்
மன்னிய நடுவிரன் மணிச்சிறு விரல்களை
யாங்குறப் பிடித்தபி னணிவிர லிணைநடு
பாங்குற நிமிர்ப்பது பஞ்சமுகமே. (உ௧)

## திரிசூல முத்திரை.

பெறுவிரல் கோத்தபின் பெருவிர னடுவிரல்
சிறுவிரல் நிமிர்ப்பது திரிசூலமுத் திரையே. (உஉ)

## மகர முத்திரை.

திரிசூ லந்தனிற் சேர்ந்ததர்ச் சனிதனை
மருவணு மிகையுற வளைத்திடில் மகரம். (உ௩)

## சிருக்கு முத்திரை.

காண்டுறு மகரக் கனிட்டையுள் வளைத்ததைத்
தீண்டிடிற் பெருவிரல் சிருக்குமுத் திரையே. (உ௪)

## மிருக முத்திரை.

கைவிரல் குவித்ததிற் கனிட்டைதர்ச் சனியெனும்
மெய்விர னீட்டிடின் மிருகமுத் திரையே. (உ௫)

## உற்பவ முத்திரை.

சிறுவிர னீட்டிச் சிறந்ததர்ச் சனியுடன்
ஒருபெரு விரல்தொடி லுற்பவ முத்திரை. (உ௬)

## நாராச முத்திரை.

இருகைமுட் டியினிமிர்த் திட்ட தர்ச்சனி
செருகிய பெருவிரல் தெறிக்கினா ராசம். (உ௭)

## திவ்விய முத்திரை.

அம்மலர் சாத்தற் கநாமிகை பெருவிரல்
செம்மையிற் செறிவது திவ்விய முத்திரை. (உஅ)

## சண்முக முத்திரை.

ஆக்கினை முதனடு வணிவிரல் செவிகண்
மூக்கினை மறைத்தல் சண்முக முத்திரை. (உகூ)

## நேத்திர முத்திரை.

சேட்டை கனிட்டைமேற் சேரமூ விரலையும்
நீட்டி விரிப்பது நேத்திர முத்திரை. (௩0)

## தாள முத்திரை.

இலங்குற முக்கா லிடக்கையில் வலக்கைத்
தலங்கொடு தட்டுதல் தாளமுத் திரையே. (௩க)

## பரிக முத்திரை.

தகைபெற முட்டியிற் றர்ச்சனி நிமிர்த்துப்
பகர்வலஞ் சுற்றுதல் பரிகமுத் திரையே. (௩உ)

## முத்கர முத்திரை.

முற்சுசி நான்கின் முட்டியி னிமிர்த்துத்
தற்சனி நுதியாற் றட்டுதல் முத்கரம். (௩௩)

## திராசனி முத்திரை.

பிடித்திடும் வலக்கையிற் பிறங்குதர்ச் சனிநிமிர்த்
திடக்கையி லடித்திடு மெனிற்றிரா சனியே. (௩ச)

திருச்சிற்றம்பலம்.

சிவபூஜா முத்திரை முற்றிற்று.

---

முத்திராலக்ஷணம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

கமலை - ஞானப்பிரகாச தேசிகர் அருளிச்செய்த

# பிராசாதமாலை.

## காப்பு

அருள்வளர் தில்லை மூதூ ரழகிய மன்றி லாடும்
மருவிய பெருமா னீன்ற மழவிளங் களிறு காக்க
விரவிய சிவாக மத்தின் விதிவழி கலையீ ரெட்டுந்
திருமலி தமிழி னாலே தேர்ந்துரை செப்ப லுற்றேன்.

## நாமம்

மேதையருக் கீசவிட கலைமேல் விந்து
விரவுமர்த்த சந்திரன்மே னிரோதி நாதம்
ஓதியநா தாந்தமொடு சத்திவியா பினியே
யுயர்சமனை யுன்மனைபன் னிருகலையா யோங்கும்
மீதிலகுஞ் சமனைக்கும் வியாபினிக்கு நடுவே
வியோமரூ பினியனந்தை யனாதையனா சிருதை
யேதமற வேபொருந்திக் கலைபதினா றாகும்
ஈசனணி யம்பலத்தா னிணையடிக்கீ ழிவையே. (க)

## மாத்திரை

முன்னுரைத்த பன்னிரண்டு மாத்திரைகள் பெறுங்கான்
மூன்றாகு மேதையிரண் டருக்கீச முறையே
பன்னுவிட கலையொன்றாம் விந்துவின்பா லரையாம்
பகருமர்த்த சந்திரன்கா னிரோதிபடு மரைக்கால்

உன்னியமா காணிபெறு நாதநா தாந்தம்
ஒருபதுமுந் திரிகையைந்து சத்திவியா பினிக்காம்
மன்னுமிரண் டரைசமனை யொன்றேகா லாகு
மனமாத்ரை யுன்மனைக்கு வருமிவைக ளுணரே. (உ)

## வியாபகம்

மூலமுத னுபியந்தங் கோடகலை நாபி
முதலிதயாந் தம்மேதை யிதயமுதற் கண்டத்
தா லுமருக் கீசவிடங் கண்டமுதற் றாலு
வந்தரத்துட் புருவநடு விந்துநடு முதலாய்
சால்பிரம ரந்த்ரமர்த்த சந்திரனி ரோதி
தருநாத நாதாந்தந் தானுகு மிவைமேற்
கோலமுதற் றுவாதசாந் தத்தளவுஞ் சத்தி
குலவுவியா பினிசமனை யுன்மனையுங் குறிப்பாம். (௩)

## அளவு

பண்புறுமூ லாதார முதனுபி யந்தம்
பயில்கோட கலைத்தானம் பன்னிரண்டங் குலமே
நண்புதரு நாபிமுத லிதயாந்த மேதை
நவிலும்விரற் பன்னிரண்டா நல்லிதய முதலாக்
கண்டாந்த மருக்கீச மங்குலமேழ் காட்டுங்
கண்டமுதற் றாலுவினந் தரம்வரையிற் காணிற்
கொண்டவிடத் தானத்தி லங்குலநா லாகுங்
கொடும்புருவ நடுவிந்துத் தானமொரங் குலமே. (௪)

## இதுவுமது

புருவநடு முதற்பிரம ரந்திரமட் டாகப்
பொருந்துமத்த சந்திரனே முதற்கலைநா லினுக்கும்
பெருகிடுமொவ் வொன்றினுக்கு மும்மூன்றாய் மருவப்
பேசும்விரற் பன்னிரண்டாம் பிரமரந்தி ரத்திற்

குரியசத்தி யங்குலமொன் றுயர்ந்தவியா பினிக்காம்
ஒருமூன்று சமனைக்கு முளநான்குன் மனைக்கும்
வருநான்கங் குலமாகத் தானமிவை யொன்பான்
மதித்திடுமெங் குலமறுபான் வகுப்பரறிந் தவரே. (௫)

## சூனியம்

மேதைமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
விந்துமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நாதமுதன் மூன்றுகலை முடிவினிலொன் றாகும்
நண்ணுவியா பினிக்குமொன்று நாலாவ தாவே
யோதுசம னைக்குச்சூ னியமொன்றே யாக
வுரைப்பரது வைந்தாகு முன்மனைக்கு மொன்றாம்
பேதமறு சூனியமா ருகுமதன் மீதே
பெரியபர மிருக்குமெனப் பேசுவர்நல் லோரே. (௬)

## வடிவு

மிகுமவ்வொ டுகரமக ரம்வட்ட மிவையே
வெண்மதியி னொருபாதி திரிகோண மிவைமேற்
பகருமிரு மருங்குசுழி நடுக்கலப்பை யொன்று
பயில்வலத்து விந்துவொரு கலப்பைபா லொன்றும்
நிகரில்விந் திடம்படைத்த கலப்பைவடி வொன்றே
நிகரில்வலம் படைத்தவிந்து திரிசூல நிகழுந்
திகழுமிரு விந்துநடு விரண்டுபடு ரேகை
செறிகுடிலங் கலைவடிவந் தெரிபனிரண் டினுக்கே. (௭)

## தேவதை

செங்கமலத் தயன்மேதை யருக்கீச கலைக்குத்
திருமாலாம் விடகலைக்குத் தெய்வமுருத் திரனும்
பங்கமிலா விந்துவுக்கு மகேசுரனே யாகும்
பகருமத்த சந்திரனே முதற்புகனு லினுக்குந்
தங்குசதா சிவந்தெய்வஞ் சத்திமுத லாகத்
தருங்கலைக்குச் சிவனெனவே சாற்றுவர்நல் லறிஞர்
மங்குல்படி பொன்முகட்டு மணிமாடஞ் செறியு
மன்றுடையா னின்றதிரு மலரடிக்கீ ழிவையே. (அ)

## தத்துவம்

மண்முதலாப் பிரகிருதி யந்தம்வரை மேதை
வருமருக்கீ சம்படரு மாயைதவி ராறில்
எண்ணில்விட கலைமாயை பொருந்தியிடும் விந்தில்
இலகுசுத்த வித்தையுட னீச்சுரமு மிருக்கும்
நண்ணுமத்த சந்திரனே முதலொருநா லினுக்கும்
நாட்டுசதா சிவஞ்சத்தி யிரண்டாக நவில்வர்
கண்ணுகலை நாலினுக்கும் பரசிவந்தத் துவமாங்
கனகமணி யம்பலத்தான் கழலிணைக்கீ ழிவையே. (கூ)

## ஒளி

சொரிதழலொன் றிந்திரவி கூடுமொளி யொன்று
தோன்றியமின் மினியொன்று சுடர்த்தீப மொன்று
பரவியவா ளொளியொன்று புகைநிறமொன் றுரும்
படர்நாத மாணிக்க வொளியொன்று பார்க்கில்
வருகின்ற மின்னொளியா நாதாந்த மொன்று
வருமிரவி நூறுசத்தி வியாபினியா யிரமாம்
அருள்சமனை யொருகோடி யாதவர்போ லெரிக்கும்
அனந்தசூ ரியரொளிபோ லணிதருமுன் மனையே. (க0)

வேறு

விளங்குகலைக் காரியங்க ளத்தனையு மின்றும்
　　வியோமரூ பினியனந்தை யனுதையனு சிருதை
வளங்குலவு வடிவுவிந்து நான்கினுக்கு மொக்கும்
　　வழுத்தியனு ஞகாயம் வளர்ஞான வாரி
துளங்கியசின் மயவாடி தூயமதி கோடி
　　சோதியிவை தியானமெனச் சொல்லுவர்நல் லறிஞர்
களங்கமறு சமநாந்தந் துவாதசாந் தந்தான்
　　கருதுநிரா தாரமென்பர் உன்மனையுங் கடந்தே. (கக)

திருச்சிற்றம்பலம்.

பிராசாதமாலை முற்றிற்று.

---

ஸ்ரீநடேசாய மங்களம்.

---

# செபமாலை.

அக்க மாலையை யணிவதே யன்றி
அரனுமை கணபதி யறுமுகன் வைரவன்
வீரபத் திரனிவர் மேம்படு மந்திரம்
செபித்திடு வதற்கொரு செம்மைசேர் மாலிகை
விசேட மாமென விளம்புவர் பெரியோர்
பஞ்சாக் கராதி பகர்ந்திட விரலினும்
எண்மடங் கிரேகை யென்பர்மிக் கறிந்தோர்
புத்திர தீப மாமணி மாலை
பத்து மடங்கு பயன்றந் திடுமால்
பவளமாலை பகரோ ராயிரம்
படிக மணியொரு பதினா ராயிரம்
முத்துமா மணிமுழு லக்ஷம தாகும்
அதனினுந் தாமரை யணிமணி மாலை
பத்து லக்ஷம் பயனளித் திடுமால்
தமனிய மாலை தந்திடுங் கோடி
கூறிய வவற்றுட் கோதிலா வக்கம்
எண்ணிலா மடங்கா மென்பர்நூ லாய்ந்தோர்
ஆதலா லக்க மாமணி ஜெபிக்க
மேலதா மென்று விளம்பிடு நூலே
செபமா லைக்குச் செப்பிடு மிரண்டு
மூன்றீ ராறு முகம்பதின் மூன்றும்
ஆகா தென்றே யகத்திற் கொளுமின்
போகம் விரும்பின் புகலுநூற் றெட்டு
ஐம்பத்து நான்கா மழகிய மணியும்
அதனா டிருபா னேழு நயந்திடும்
மோக்க விருப்பம் மீக்கொண் டிடுவோர்
இருபத் தைந்தா மினமணி சேர்த்துப்
புனைந்த மாலையாற் புகலுதல் வேண்டும்
நாயக மின்றி நயம்படச் செபிக்கினும்
பாதக மிலையெனப் பகருவர் பல்லோர்
ஆயினு நன்மை யதிகமு மிலையே.

இப்புத்தகம் தேவையானவர்கள் அடியிற்க[illegible]விலா சத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். ஒ[illegible]வை 10-புத்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புத்தக[illegible]மளிக் கப்படும்.

ப. தானப்ப முதலியார், [illegible]
43, வெங்கடாசல முதலி[illegible]ி,
பார்க்கு ட[illegible]சென்னை.